CC No.204/2015 , நாள்: 24.02.2020

அ.சா.1 ___ ராமமூர்த்தி த/பெ. சுப்பிரமணிய கவுண்டர்

முதல் விசாரணை வாக்குமூலம்.

நான் தற்போது திருவயலூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் கோணானூரில் குடியிருந்து வந்தேன். நான் முன்னாள் ராணுவ வீரர். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 22.08.2015ம் தேதி சனிக்கிழமையன்று மாலை வேலையில் லேசாக மழை தூறிக்கொண்டிருந்தது. அந்த சமயத்தில் ஆடுகளை பட்டியல் அடைப்பதற்காக அழைத்தபோது அதில் ஒரு வெள்ளாடு மற்றும் காணாமல் போனது தெரியவந்தது. அன்று இரவு முழுவதும் எனது நிலத்திலும் அருகிலுள்ள இடங்களிலும் தேடிப்பார்த்தும் காணாமல் போன ஆடு கிடைக்கவில்லை. மறுநாள் காலையில் நான் சந்தேகப்பட்டு போச்சம்பள்ளி சந்தையில் வந்து பார்த்தபோது சந்தையில் எனது ஆட்டை ஆஜர் 2ம் எதிரி முனிஸ்வரன் கையில் பிடித்திருந்தார். அருகில் ஆஜர் 1ம் எதிரியும் நின்றிருந்தார். மற்றொரு நபர் ஆட்டை வாங்கியவர் எனறு அவரும் உடன் நின்றுக்கொண்டிருந்தார். என்னுடன் எனது மகன் அருண்ராஜா என்பவரும், எனது வீட்டிற்கு அருகிலிருக்கும் பெரியண்ணன், குமரேசன் ஆகியோரும் வந்திருந்தார்கள். நாங்கள் எதிரிகளிடம் ஆடு எங்களுடையது நீங்கள் எவ்வாறு விற்கலாம் என்று பேசினோம். அப்போது எதிரிகள் அது அவர்களது ஆடு என்று சொன்னார்கள். அதன்பிறகு நான் என் ஆட்டிற்கான அடையாளங்களை சொல்லி எனது ஆடு என்று சொன்னபோது ஆட்டின் கயிறை விட்டுவிட்டு மூன்று பேரும் ஓடிவிட்டார்கள். அவர்களை துரத்தி சென்றபோது போச்சம்பள்ளி மேல்நிலை பள்ளிக்கு பின்னால் உள்ள கரும்பு தோட்டத்தில் 2 மற்றும் 3 எதிரிகள் பதுங்கியிருந்ததை பார்த்து அவர்களை மடக்கி பிடித்தோம். 1ம் எதிரி தப்பி ஓடிவிட்டார். பின்னர் பிடிப்பட்ட இரண்டு எதிரிகளையும் என் ஆட்டுடன் போச்சம்பள்ளி காவல் நிலையம் கொண்டு சென்று புகார் அளித்தேன். காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள். 3ம் எதிரி பாலிடெக்னிக் கல்லூரியில் படித்துக்கொண்டிருப்பதாக சொன்னார்கள்.

அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும் (3ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை.) திருடுபோன ஆட்டை மறுநாள் நீதிமன்றம் மூலம் எடுத்துக்கொண்டேன். ஆடு காணாமல் போய் சுமார் 20 நாட்களில் ஆடு உடல் நலமின்றி இறந்துவிட்டது.

குறுக்கு விசாரணை

ஆடுகளை யார் மேய்க்கிறார்கள் என்றால் நானேதான் மேய்ப்பேன். நான் கூறும் 22.08.2015ம் தேதியில் காலை முதல் மாலை வரை என்னுடைய கட்டுப்பாட்டில்தான் ஆடுகள் மேய்ந்துக்கொண்டிருந்தன என்றால் சரிதான். அன்றைய தினம் நான்தான் சென்று பட்டியில் அடைத்தேன் என்றால் சரிதான். ஆடுகள் தோற்றத்தில் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும் என்றால் சரிதான். ஆடுகளை பார்க்கும்பொழுது அவைகளுக்கிடையில் வித்தியாசம் தெரியாது என்றால் சரிதான். பயன்படுத்தும் கயிறு மற்றும் சங்கிலி ஆகியவற்றை வைத்து அயைடாளம் காணாலம். எதிரிகள் இரண்டு பேரை பள்ளிக்கு பின்னே உள்ள கரும்பு தோட்டத்தில் பிடித்ததாக என்னுடைய புகாரில் கூறியிருக்கிறேனா என்றால் கூறியிருக்கிறேன். புகாரை எழுதிய கையெழுத்து என்னுடையதல்ல என்றால் ஒரு எழுத்தர் பழனியுடையது. மேற்படி பழனி என்பவர் காவல் நிலையம், வட்டாட்சியர் அலவலகம் ஆகிய இடங்களுக்கு மனுக்கள் மற்றும் புகார் எழுதிக்கொடுப்பவர் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் காலை 10.00 மணியிருக்கும். காணாமல் போனது தெரிந்த உடனேயே காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான்கூறும் விதமான 22ம் தேதியிலேயே காணாமல் போயிருந்தால் நான் அன்றே புகார் கொடுத்திருப்பேன் என்றும் அன்றைய தினம் காணாமல் போகவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நாளிலோ சொன்ன நேரத்திலோ, சொன்ன இடத்திலோ ஆட்டை பிடித்ததாகவும், எதிரிகளை பிடித்ததாகவும் கூறுவது பொய்யானது என்றும், நான் அவ்வாறு பிடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆடு இறந்துபோனது குறித்து

நான் ஏதாவது தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் பிடித்துச்சென்ற ஆடுதான் என்னுடையது என்று காண்பிக்க புகைப்படங்களோ அல்லது ஏதேனும் விவரங்களோ உள்ளனவா என்றால் இல்லை. நான் ஆட்டை திரும்ப பெறும்பொழுது தேவைப்படும்போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதாகவும் அல்லது நீதிமன்ற உத்தரவினை செயல்படுத்துவதாகவும் நிபந்தனைகள் கண்டுதான் பெற்றுச்சென்றேன் என்றால் சரிதான். அந்த ஆடு இறந்துபோகவில்லை என்றம் என்னுடைய தேவைக்காக விற்பனை செய்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. ஆடு காணாமல் போனதாக கூறுவதே பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு நான் ஆட்டை அடையாளம் காட்டியிருந்தாலும் அது என்னுடைய ஆடு அல்ல என்றும் ஒரு தவறான தகவல் அளித்து ஒரு புகார் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார் என்றால் என் வீட்டிடம் வந்து 2 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். அதற்கு முன்போ பின்போ என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் போலிசார் என்னை விசாரிக்கவிலலை என்றும் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.